தொடர்பாடல் சேவைகள்		743,299.58	782,767.57
தபால் கட்டணம்		92,950.00	269,835.00
வர்த்தக விளம்பர செலவினங்கள்		924,564.40	813,561.11
போக்குவரத்து கட்டணங்கள்		1,876,665.75	3,814,697.52
		15,616,951.03	**20,041,763.01**
தேய்மானம்			
கட்டிடம்		2,350,593.41	2,029,553.43
கணினி		2,508,077.00	2,821,429.65
தளபாடம், பொருத்தல் மற்றும் உபகரணம்		5,671,547.77	4,904,217.21
மோட்டார் வாகனம்		2,056,824.11	2,052,857.86
பொறியும், இயந்திரமும்		3,094,578.75	2,531,240.04
கைத்தொழில் தையல் இயந்திரம்		1,630,417.73	1,366,897.73
ஆய்வுகூட உபகரணம்		7,946,583.80	8,210,104.99
நூல் மற்றும் வார சஞ்சிகைகள்		378,412.48	275,419.88
		25,637,035.05	**24,191,720.79**
வேறு செலவினங்கள்			
வெளி விரிவுரையாளர் கட்டணங்கள்		1,400,879.35	2,276,385.77
கணக்காய்வுக் கட்டணங்கள் - ஆண்டுக்கான ஒதுக்கம்		1,000,000.00	1,000,000.00
பயிற்சிப் பாடநெறி செலவினம்		2,051,620.34	6,537,042.45
பல்வேறு செலவினங்கள்	**22.1**	**231,752.73**	**561,957.89**
மனிதவள அபிவிருத்தி – வெளிநாடு		-	2,202,889.16
பதவியணி நலன்புரி – தேநீர் செலவினம்		1,125,395.55	1,336,361.16
பதவியணி மருத்துவ உதவித்திட்டம்		1,749,907.46	1,958,384.20
நலன்புரிச் சங்கம்		200,000.00	200,000.00
நிருவாக சபை கட்டணம்		206,000.00	366,800.00
காட்சிப்படுத்தல் கட்டணம்		40,390.00	73,314.00
முத்திரை வரி		28,850.00	37,300.00
தொழில்சார் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம்		90,034.85	260,166.52
ஐயக் கடன்பட்டோர்		716,705.23	251,961.05
NVQ தரப்படுத்தல் செலவினம்		487,642.00	293,188.00
ஹோஸ் பரிசோதனைக்கான செலவினம்		151,000.00	309,600.00
உறுப்பினர் பங்களிப்புத் தொகை		129,364.72	124,490.85
பாடசாலை சீருடை பிடவைகளை பரிசோதிப்பதற்கான செலவினம்		21,176.16	19,075.51
தடுத்துவைத்தல் வரி		-	728,895.20

தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி – செலவினம் 2%		-	8,589.00
தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் MTB உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு		86,000.00	183,000.00
கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு, கற்கை சபை உறுப்பினர்களுக்கான கொடுப்பனவு		72,000.00	77,018.40
உபசரணை செலவினம்		193,387.37	255,801.83
சான்றிதழ்களை கையளிக்கும் வைபவம்		-	73,364.00
மன்னார் நிலையத்தின் செலவினம்	**22.2**	**-**	47,055.00
பட்டமளிப்பு அந்தஸ்தை பெற்றுக் கொள்வதற்கான செலவினம்		80,000.00	2,573,945.00
பொருளாதார சேவைகள் கட்டணம்		-	767,617.00
வெளியீடுகள் மற்றும் சஞ்சிகைகள்		213,705.00	432,624.90
பதவியணி அபிவிருத்தி நிதியம்		488,285.00	677,918.00
தொரமடலாவ மாணவர் வைபவம்		69,000.00	-
சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கருத்திட்டம்		443,511.37	-
பாடசாலை சீருடை பரிசோதனை		1,302,576.19	-
சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிசார் செலவினம்		12,000.00	-
அகற்றல் மூலம் பெற்ற நட்டம்	**22.3**	4,004.02	-
கொவிட் தொற்றுக்கான செலவினம்		276,101.00	-
		12,871,288.34	**23,634,744.89**

நானாவித செலவினங்கள்

பத்திரிகை பட்டியல்	24,840.00	40,680.00
ஊழியர் கட்டணம்	6,000.00	3,200.00
சாரதி உரிமப்பத்திரத்தை புதுப்பித்தல்	-	3,000.00
கழிவுகளை அகற்றும் கட்டணம்	-	26,973.90
கௌரவ கொடுப்பனவு	21,000.00	57,000.00
மொழிபெயர்ப்புக் கட்டணம் - ஆண்டறிக்கை மற்றும் வேறு	4,007.00	62,712.25
வாகனம் நிறுத்தல் கட்டணம் (முதலீட்டு மேம்பாட்டு சபை)	910.00	290.00
மாணவர்களுக்கான மருந்துகள் /மருத்துவ சிகிச்சை	9,292.73	23,316.96
புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை கட்டுதல்	5,990.00	300.00
பிரித் போதனை	50,338.00	64,118.71
வெசக் அழங்காரம் மற்றும் சிங்கள புத்தாண்டு பங்களிப்புத் தொகை	-	140,123.50
ஆடை கழுவும் கட்டணம்	-	1,181.27
வேறு செலவினங்கள்	4,300.00	500.00
புத்தாண்டு வாழ்த்துக்கள்	-	54,000.00
ஆடை நிறுவனம் - வருடாந்த பொதுக் கூட்டம்	-	10,000.00
மேல் அங்கி	18,750.00	12,000.00
விலைமதிப்புக் கட்டணம்	540.00	10,000.00
மேசை நாற்காட்டி	-	432.00
பரிசோதிக்கும் கட்டணங்கள் - நீர் மாதிரி	-	4,936.23
பட்டச் சான்றிதழை உறுதி செய்தல்	-	2,500.00
பதவியணிக்கான அடையாள அட்டை	100.00	600.00
DTAC கொடுப்பனவு	8,320.00	17,500.00
சஞ்சிகைகளுக்கான பங்களிப்புத் தொகை	20,694.72	21,908.07
அங்குரார்ப்பண வைபவம்	1,450.00	-
கருவி மற்றும் சிறு பொருட்கள்	7,711.64	-
தீயணைப்பு பற்றிய மாதிரியமைப்பு	23,500.00	-
அறிக்கைகளுக்கான கட்டணம்	6,000.00	-
விசேட விரிவுரையாளர் கட்டணம்	3,120.00	-
பொருட்களை அனுப்பும் கட்டணம்	7,648.64	-
நில வாடகை	3,240.00	
பிண்ணல் கட்டணம்	4,000.00	-
	231,752.73	**557,272.89**


மன்னார் நிலையத்தின் செலவினம்


செலவினம்		
மேலதிக நேரக் கொடுப்பனவு, பிரயாணக் கட்டணம், வாரஇறுதி நாள் கொடுப்பனவு		37,250.00
பௌதீக மீள்மதிப்பீட்டுச் செலவினம்		9,805.00
நிறுவனம் தாங்கிக் கொண்டுள்ள செலவினம்	-	**47,055.00**

சொத்துக்களை அகற்றியதன் மூலம் பெற்ற நட்டம்


சொத்துக்களுக்கான செலவினம் - 2020	1,913,724.49	
தேய்மானம்	1,821,160.03	
விற்பனை வருமானம்	88,560.44	
அகற்றலிலிருந்து பெற்ற மொத்த நட்டம்	(4,004.02)	
நிதிசார் செலவினம்		
அந்நியச் செலாவணி நட்டம்	-	285.74
வங்கிக் கட்டணம்	75,148.10	181,715.12
	75,148.10	**182,000.86**
பிற்போடப்பட்ட வருமானம்		
அரசாங்க கொடையாக பெற்ற தேய்வடைந்த சொத்துக்களின் அளவு	23,110,220.99	21,830,794.82
மனித வள அபிவிருத்திக்கான அரசாங்கத்தின் பங்களிப்பு	-	1,184,930.81
	23,110,220.99	**23,015,725.63**


செயலாற்றுகை சுட்டி


ஊழியர் ஒருவரின் வருமானம்
ரூ.மி.
2,000
1,500
1,000
500
-
1,505
1951
1614
1926
1622
2016
2017
2018
2019
2020
ஆண்டு
ஊழியர் ஒருவரின் வருமானம்


மீண்டெழும் செலவினம்
153
168
177
187
184
100%
80%
60%
40%
20%
0%
2016
2017
2018
2019
2020
ஆண்டு
மீண்டெழும் செலவினம்


மீண்டெழும் செலவினம் வருமானத்தின் விகிதமாக
(தேய்மானம் தவிர)






நிதிக் கூற்றுக்கள் பற்றிய அறிக்கை

வருமானம்



மீளாய்வு ஆண்டில் நிறுவனத்தின் மொத்த வருமானம் ரூ.மி. 162 ஆக பதிவாகியுள்ளதுடன் இது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11% ஆன வளர்ச்சியாகும். மீளாய்வு ஆண்டில் கொவிட் 19 காரணமாக பாடநெறிகளை நடாத்த முடியாது போனதனால் முழு வருமானமும் ரூ.மி. 20.74 இனால் குறைவடைந்தது. இந்த ஆண்டு முதல் மூன்றாம் காலாண்டின் இறுதி வரை பாடசாலை சீருடைகளை பரிசோதிப்பது ஆரம்பிக்கப்பட்டது.


செயற்பாட்டு வருமானம்




பரிசோதித்தல், பயிற்சியளித்தல் மற்றும் ஆலோசனை சேவைகள் மூலம் உழைக்கப்பட்ட வருமானம் ஒட்டுமொத்த செயற்பாட்டு வருமானத்தில் 87% ஆகும் என்பதுடன், செயற்பாட்டு வருமானத்தில் 13% இற்கு வட்டி வருமானம் (நிலையான வைப்பு, திறைசேரி உண்டியல்கள், அழைப்பு வைப்பு வட்டி), போக்குவரத்து வருமானம் மற்றும் பல்வேறு செயற்பாடுகள் போன்ற மூலங்களிலிருந்து பங்களிப்புக் கிடைக்கின்றது. தொழில்நுட்ப சேவைகள் வருமானம் மொத்த வருமானத்தில் 17% ஆகும். எனினும் இந்த ஆண்டின் மொத்த வருமானத்திற்கு பங்களிப்புச் செய்யும் பிரதான வருமான மூலமாக இருப்பது பரிசேதனை வருமானமாகும். இது மொத்த வருமானத்தில் 43% ஆன பங்களிப்பை வழங்கியுள்ளது. இது இராணுவ சீருடை, பாடசாலை சீருடை மற்றும் ஏனைய சாதாரண பரிசோதனை செயற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பயிற்சி வருமானம் 50% இனால் குறைந்துள்ளது. சகல பயிற்சி வகுப்புக்களும் 2020 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதி முதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதுடன், இந்த ஆண்டுக்கான புதிய பாடநெறிகள் ஆரம்பிக்கப்படவில்லை.

பரிசோதனைகளின் மூலம் பெற்ற வருமானம்


மீளாய்வு ஆண்டில் பரிசோதனை மூலம் 4,953 மாதிரிகள் தொடர்பில் 51,9888 பரிசோதனைகள் நடாத்தப்பட்டதுடன், ரூ.மி. 67.5 ஆன வருமானம் உழைத்துக் கொள்ளப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் பரிசோதனை வருமானத்தில் 43% ஆன வளர்ச்சி இடம்பெற்றுள்ளது.





பயிற்சியளித்தல் மற்றும் ஆலோசனை

நிறுவகத்தினால் ஆற்றப்படுகின்ற மற்றைய சேவை பயிற்சியளிப்பதாகும். 2020 ஆம் ஆண்டு நிறுவனத்தினால் பயிலுனர்கள் 1261 பேருக்கு பயிற்சியளிக்கப்பட்டுள்ளதுடன், நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகளின் எண்ணிக்கை 57 ஆகும். மேலும் 2019 ஆம் ஆண்டு உழைக்கப்பட்ட வருமானம் ரூ.மி. 87.25 உடன் ஒப்பிடுகையில் மீளாய்வு ஆண்டில் பயிற்சி மூலம் மூலம் உழைக்கப்பட்ட வருமானம் ரூ.மி. 43.65 ஆகும். கொவிட் 19 தொற்று நோய் நிலைமை காரணமாக இது 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 50% ஆன குறிப்பிடத்தக்களவு குறைவாகும்.



வேறு மூலங்களிலிருந்து பெற்ற வருமானம்

வேறு வருமான மூலங்களிலிருந்து பிரதானமாக நிலையான வைப்புக்கள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் அழைப்பு வைப்பு மூதலீட்டு வருமானம், இடர் கடன் வட்டி வருமானம், சிற்றுண்டிச்சாலை வாடகை, மீளச் செலுத்தப்படாத கேள்வி வைப்பு மற்றும் வெளிநாட்டு நிதிப் பெறுகைகள் போன்றவற்றை உள்ளடக்கியதாக உள்ளதுடன், பரீட்சைகளுக்கு மீண்டும் தோற்றுவதற்கான கட்டணங்கள், போக்குவரத்துக் கட்டணங்கள் மற்றும் கேள்வி ஆவணங்களுக்கான கட்டணங்கள் மற்றும் பிரதிபண்ணல் கட்டணங்கள் போன்ற பல்வேறு செயற்பாடுகள் மூலம் எஞ்சிய வருமானத்துக்கு பங்களிப்பு செய்யப்பட்டுள்ளது.

செலவினம்

	2020 ரூ.மி.	2019 ரூ.மி.
செயற்பாட்டு வருமானம்	162.175	182.92
குறைக்க: மொத்த செயற்பாட்டு செலவினம்	183.829	186.59
செயற்பாட்டு இலாபம்/ நட்டம்	(21.65)	(3.67)
பிற்போடப்பட்ட வருமானம்	*23.11*	*23.01*
காலப்பகுதிக்கான தேறிய மிகை / (குறை)	1.46	19.34

முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினமான ரூ.மி. 186.59 உடன் ஒப்பிடுகையில் தாங்கிக் கொள்ளப்பட்ட மொத்த மீண்டெழும் செலவினம் ரூ.மி. 183.329 ஆகும் என்பதுடன், இதன் மூலம் செலவினங்களில் 1.5% ஆன வீழ்ச்சி பதிவாகியுள்ளது. மீண்டெழும் செலவினம் பிரதானமாக ஆளுக்குரிய வேதனாதிகள், பெறுகை மற்றும் நுகர்வுச் செலவினங்களை கொண்டுள்ளது. ஆண்டின் ஆரம்பம் முதல் 3 மாதங்களுக்கும் மேல் நிறுவனத்தை பூரணமான கொள்ளளவுடன் பேணிவர முடியவில்லை. தொற்று நோய்க் காலப்பகுதியில் பராமரிப்பு நடவடிக்கைகள் மற்றும் சம்பளங்கள் திருத்தம் செய்யப்பட்டதன் காரணமாக செயற்பாட்டு செலவினம் அதிகரித்தது.

ஒட்டுமொத்த நிதிக் கட்டமைப்பு

உட்கட்டமைப்பு வசதிகள், பொறி மற்றும் உபகரணங்கள் ரூ.மி. 160.3 ஆன தேறிய பெறுமதியைக் கொண்டுள்ளது. ஆண்டினுள் மொத்த முதலீடு ரூ.மி. 19.5 ஆகும்.

- ஒட்டுமொத்த நிறுவனம்சார் செலவினம் ரூ.மி. 183 முதல் ரூ.மி. 162 வரை 11% இனால் குறைவடைந்துள்ளது.
- மொத்த செலவினம் ரூ.மி. 186 முதல் ரூ.மி. 183.82 வரை 1.5% இனால் குறைவடைந்தது.
- மொத்த செயற்பாட்டு நட்டம் ரூ.மி. 3.6 முதல் ரூ.மி. 21.6 ஆக அதிகரித்தது.

துறைசார் அடிப்படையில் வருமானம் வகைப்படுத்தல்

துறை	வருமானம்	வருமானம்	செலவினம்								
	திருத்திய வரவு செலவுத்திட்டம் 2020 ரூபா	உண்மை ரூபா	உடன்படிக்கை சேவை ரூபா	ஆளுக்குரிய வேதனாதிகள் ரூபா	பிரயாணச் செலவு ரூபா	பெறுகை மற்றும் நுகர்வுப் பொருட்கள் ரூபா	புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு நிலையான சொத்துக்கள் ரூபா	வேறு செலவினம் ரூபா	தேய்மான செலவினம் ரூபா	மொத்த செலவினம் ரூபா	ரூபா
தரக் கட்டுப்பாட்டு ஆய்வுகூடம்	55,000,000.00	69,120,711.41	4,086,953.95	19,456,198.26	-	3,244,025.42	7,305,169.24	1,527,009.83	9,930,336.74	45,549,693.44	23,571,017.97
ஆடை தொழில்நுட்பம்	22,570,000.00	15,076,703.00	2,006,350.51	14,935,486.68	175,500.00	887,313.14	770,868.45	673,607.89	2,708,055.41	22,157,182.08	(7,080,479.08)
ஆடை தொழில்நுட்பம் உற்பத்தி	25,642,000.00	38,339,957.48	3,507,865.43	17,201,889.20	94,500.00	785,865.10	484,705.74	2,782,386.81	2,013,755.73	26,870,968.01	11,468,989.47
அபிவிருத்தி மற்றும் திட்ட வடிவமைப்பு	15,670,000.00	9,818,551.95	1,846,219.63	7,702,994.90	25,000.00	449,827.53	599,143.08	1,182,750.17	1,987,948.25	13,793,883.56	(3,975,331.61)
பொறியியல் தொழில்நுட்பம்	8,510,000.00	4,261,484.45	929,110.08	8,677,742.27	20,500.00	545,273.98	619,949.63	1,193,140.14	2,637,551.01	14,623,267.11	(10,361,782.66)
பாதணி	2,300,000.00	3,761,691.66	672,005.48	3,414,342.35	60,500.00	403,890.59	510,621.65	1,308,487.15	2,444,483.85	8,814,331.07	(5,052,639.41)
நிருவாகம் மற்றும் கணக்கு	20,646,000.00	21,795,948.01	2,568,445.95	38,210,879.71	171,900.00	1,884,756.60	990,594.74	4,279,054.45	3,914,904.06	52,020,535.51	(30,224,587.50)
முழு மொத்தம்	150,338,000.00	162,175,047.96	15,616,951.03	109,599,533.37	547,900.00	8,200,952.36	11,281,052.53	12,946,436.44	25,637,035.05	183,829,860.78	(21,654,812.82)
தேய்வு வருமானம்											23,110,220.99
வருடத்துக்கான மொத்த மிகை /(குறை)											1,455,408.17

2020 ஆம் ஆண்டிந் செயற்பாடுகள்

விசேட நிகழ்வுகள்

பாதணி உற்பத்தி பயிற்சி பாடநெறியின் சான்றிதழ் வழங்கும் வைபவம் - மன்னார்





மாநாட்டு மண்டபத்தை நவீனமயப்படுத்தல் - அங்குரார்ப்பண வைபவம்





ஏற்றுமதிக்கு பத்திக் வர்ணமிடல் பாடநெறியின் சான்றிதழ் வழங்கும் வைபவம்





பெண்களுக்கு தையல் இயந்திர பயிற்சி – மாஸ் ஹோல்டின்ஸ்





12 ஆவது பாதணி மற்றும் தோள் உற்பத்தி கண்காட்சி 2020





கொவிட் 19 இலிலிருந்து ஆட்களை பாதுகாக்கும் உபகரணங்களை கையளித்தல்





වාස්තු විද්‍යාඥ සරත් ප්‍රනාන්දු මහතා ශ්‍රී ලංකා පේෂකර්ම හා ඇඟලුම් ආයතනයේ අධ්‍යක්ෂ ජනරාල් තනතුරෙහි වැඩ භාරගැනීම





பொல்பித்திகமவில் நடாத்தப்பட்ட பாதணி உற்பத்தி பயிற்சி நிகழ்ச்சித்திட்டம்





ISO தரச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளும் உத்தியோகபூர்வ நிகழ்வு





தையற்காரர்களின் சங்கத்துக்கான விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்





இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகத்தின் பதவியணியினருக்கு தீப் பாதுகாப்பு பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம்





சிறுவர் ஆடைகளுக்கான சுகாதார பாதுகாப்பு சான்றிதழை வழங்கி வைத்தல்





வடிமைப்பு பற்றிய விஞ்ஞானமானிப் பட்டப்படிப்பை
அங்குரார்ப்பணம் செய்தல்





தொரமடலாவ





රාජ්ය කයීන මහෝත්සවය සහ පඩුපෙවීමේ මහා මංගල්යය SLITA ආයතනයේ දායකත්වයද සහිතව සිදු කරන ලදී.





பத்திக் பயிற்சி நிலையத்தை திறந்துவைத்தல் - கல்கமுவ





2021 ஆம் ஆண்டுக்க ான எதிர்காலத் திட்டங்கள்

- டிஜிரல் முறையை அடிப்படையாகக் கொண்டு சேவை வழங்குதல் மற்றும் கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- மாணவர்கள் 200 பேருக்கு மேற்பட்ட எண்ணிக்கையானோருக்கு வகுப்பறை வசதிகளை செய்துகொடுப்பதற்கு வகுப்பறைகளை புதுப்பித்தல்.
- தெரிவு செய்யப்பட்ட பாடநெறிகளுக்கு NVQ 4/5 அந்தஸ்தைப் பெற்றுக் கொள்ளல்.
- ஆடை உற்பத்திக்கு வாழை நாரை வணிகமயப்படுத்தல்.
- நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை உற்பத்தி தொடர்பிலான சுகாதார மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளை அறிமுகம் செய்தல்.
- நிறுவகத்திற்கு பட்டம் வழங்கும் அந்தஸ்தைப் பெற்றுக் கொள்ளல்.
- கற்கை, ஆராய்ச்சி மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்கு ஏனைய நிறுவனங்களுடன் ஒத்துழைப்பு முயற்சிகளை மேற்கொள்ளல்.

தேசிய கணக்காய்வு அலுவலகம்

எனது இல. TCM/B/SLITA/20/FS/22 திகதி : 2022 சனவரி மாதம் 06 ஆம் திகதி

தவிசாளர்,

இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகம்.

இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகத்தின் 2020 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் மற்றும் வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய 2018 இன் 19 ஆம் இலக்க சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் பற்றிய கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனது அறிக்கை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைக்கப்படும்.

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள கருத்துக்கான அடிப்படையாக விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிறுவகத்தின் 2020 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும், நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) நிலையான வைப்பு முதலீடு மூலம் 2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்குக் கிடைக்க வேண்டிய வட்டி வருமானம் ரூபா 9,195,787 ஆயினும், இது ரூபா 7,341,295 ஆக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதன் காரணமாக ஆண்டின் வட்டி வருமானம் ரூ. 1,854,492 குறைவாக நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 இன் 09 ஆம் பிரிவுக்கு அமைய, முதலீடுகள் காசுக்குச் சமமான விடயங்களாக இனங்காண தகைமைபெறுவது மேற்படி முதலீடுகள் 03 மாத கால முதிர்ச்சிக் காலத்தை கொண்டுள்ள சந்தர்ப்பத்திலாயினும், ஒரு வருட காலத்திற்கு முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 4,777,943 ஆன காசு மற்றும் காசுக்கு சமமான விடயங்களாக இனங்காணப்பட்டிருந்தது. மேலும் மேற்படி நியமத்தின் 40 ஆவது பிரிவுக்கு அமைய பெற்ற முதலீட்டு வட்டி ரூபா 22,159,341 ஆன தொகை காசோட்டமாக தனியாக வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) நிறுவனத்திற்கு உரித்தான காணிகளின் பெயரளவுப் பெறுமதியாக ரூபா 5,018,434 நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் கணக்கீட்டு நியம இலக்கம் 07 இன் 42 ஆம் பிரிவுக்கு அமைய மேற்படி காணிகள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் நியாயமான பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உட்புகுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை அரசதுறை கணக்கீட்டு நியம இலக்கம் 07 இற்கமைய, மீளாய்வு ஆண்டின் இறுதியில் மொத்தமாக தேய்மானம் செய்யப்பட்டிருந்த செலவினம் ரூபா 204,839,496 ஆன ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் தற்போதும் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதிலும் அவை பற்றி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் இ.அ.து.க.நி. 03 இற்கமைய, மேற்படி சொத்துக்களின் விளைதிறன்மிக்க ஆயுட் காலம் பற்றிய மதிப்பீட்டு தவறுகளை மீண்டும் மீளாய்வு செய்து நிதிக் கூற்றுக்களில் சீராக்கல் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். குறித்த கணக்கீட்டு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும், பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிறுவனத்தின் 2020 ஆண்டறிக்கையில் உள்ளடங்கும் ஏனைய தகவல்கள்

இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட 2020 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள போதிலும் நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது பற்றிய எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், ஏனைய தகவல்கள் என்பதனால் கருதப்படும். இந்த ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாதல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கருத்துக்கள் ஏனைய தகவல்களை வெளிப்படுத்துவதில்லை என்பதுடன் நான் அது தொடர்பில் எந்த வகையிலும் உறுதிப்படுத்தல் அல்லது கருத்துக்களை தெரிவிப்பதில்லை.

நிதிக் கூற்றுக்கள் பற்றிய எனது கணக்காய்வு தொடர்பாக, எனது பொறுப்பாக இருப்பது மேலே இனங்காணப்பட்டுள்ள ஏனைய தகவல்களைப் பெற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ள போது வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும் போது ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்கள் அல்லது கணக்காய்வு அல்லது வேறு வகையில் பெற்றுக் கொள்ளப்பட்ட எனது அறிவுக்கு அமைய போதியளவானதாக பெருத்தமற்றதாக என்பதை கவனத்தில் கொள்வதாகும்.

இந்தக் கணக்காய்வு அறிக்கையின் திகதிக்கு முன்னர் நான் பெற்றுக் கொண்ட ஏனைய தகவல்களின் அடிப்படையில் மற்றும் நான் மேற்கொண்ட பணிகளின் அடிப்படையில் இந்த ஏனைய தகவல்கள் போதியளவிலானதாக தவறானதாக குறிப்பிடப்பட்டுள்ளதாக நான் தீர்மானிப்பதாயின், மேற்படி விடயம் நான் அறிக்கையிடத் தேவையாயின், இது தொடர்பில் நான் அறிக்கையிட எதுவும் இல்லை.

1.4 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை அரசதுறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிறுவனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிறுவனத்தை முடிவுறுத்துவதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதிகாரசபை அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.5 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி, உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வின் போது இனங்காணப்பட்ட கணக்காய்வுக் கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கட்டுபாடுகளை மேற்கொள்ளும் தரப்பினர்கள் அறிவுறுத்தப்பட்டார்கள்.

2 வேறு சட்டரீதியான மற்றும் ஒழுங்குறுத்தல் தேவைப்பாடுகள் பற்றிய அறிக்கை

2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடங்குகின்றன.

2.1.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய எனது அறிக்கையில் முனைப்பழியுள்ள கருத்துக்கான அடிப்படை எனும் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்கள் தவிர, கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்களையும் நான் பெற்றுக் கொண்டேன் என்பதுடன், எனது பரிசோதனைகளின் போது தெரியவந்துள்ளவாறு முறையான நிதி அறிக்கைகளை நிறுவனம் பேணிவந்திருந்தது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய நிலையம் சமர்ப்பித்துள்ள நிதிக் கூற்றுக்கள் கடந்த ஆண்டுடன் ஒத்திசைவதாக உள்ளது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய இந்த அறிக்கையின் 1.2 பந்தியின் (ஈ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தவிர கடந்த ஆண்டு தொடர்பான நிதிக் கூற்றுக்கள் பற்றி நான் சமர்ப்பித்திருந்த சிபாரிசுகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

2.2 பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றுக் கொள்ளப்பட்ட சான்றுகளின் அடிப்படையில் போதியளவிலான விடயங்களின் வரையறைகளுக்குள், பின்வரும் கூற்றுக்களை வெளிப்படுத்துவதற்குக் காரணமான எந்தவொரு விடயத்தையும் நான் அவதானிப்புச் செய்யவில்லை.

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12(ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய நிறுவனத்தின் நிருவாக சபையின் யாராயினும் உறுப்பினர் ஒருவர் நிறுவகத்துடன் தொடர்புகொண்டு யாதாயினுமொரு உடன்படிக்கை தொடர்பில் நேரடியாக அல்லது மறைமுகமாக சாதாரண வியாபார நிலைமைக்கு புறம்பாக செயற்பட்டுள்ளமை.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய, பின்வரும் அவதானிப்புக்கள் தவிர யாதாயினும் ஏற்புடைய எழுத்துமூலமான சட்டம் அல்லது நிறுவகத்தின் நிருவாக சபையினால் வெளியிடப்பட்டுள்ள வேறு பொதுவான அல்லது விசேடமான ஏற்பாடுகளுக்கு ஒவ்வாமை இடம்பெறுகின்றவாறு செயற்பட்டுள்ளமை.

சட்டங்கள், விதிகள் ஏற்பாடுகளுக்கான தொடர்பு		**அவதானிப்பு**
(அ)	2009 இன் 12 ஆம் இலக்க நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவன சட்டத்தின் 16 ஆம் பிரிவு	ஒவ்வொரு நிதி ஆண்டின் இறுதியிலும் நிறுவனத்தினால் குறித்த ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட அதன் செயற்பாடுகள் பற்றிய அறிக்கை வெளியிடப்பட வேண்டும் என்பதுடன், அமைச்சரின் அங்கீகாரத்தின் பின்னர் பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைக்கப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் 2019 ஆண்டு தொடர்பில் மேற்படி அறிக்கை பாராளுமன்றத்தில் சபாபீடத்தில் வைக்கப்பட்டிருக்கவில்லை.
(ஆ)	1994 யூன் 14 ஆம் திகதிய 95 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2000 சனவரி 11 ஆம் திகதிய பீஎவ்/பீஈ 5 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை	(i)நிறுவனத்தினால் ஊழியர்களுக்கு செலுத்தப்படுகின்ற சகல கொடுப்பனவுகளுக்கும் திறைசேரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயினும், மீளாய்வு ஆண்டில் செலுத்தப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 1,555,032 ஆன ஆய்வுகூட பரிசோதனை பதவியணியினருக்கான கொடுப்பனவு, வாராந்த பாடநெறிக்கான பதவியணிக்

		கொடுப்பனவு, போதனாசிரியர் கொடுப்பனவு, பாடநெறி ஒருங்கிணைப்புக் கட்டணம் போன்ற கொடுப்பனவுகளுக்கு அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. (ii) ஊழியர் மருத்துவக் காப்புறுதிக்கு வருடாந்த தவணைப்பணம் ரூ. 360,562 உம், மருத்துவ பட்டியல்களை மீள்நிரப்புச் செய்வதற்கு ரூபா 1,276,211 உம் பொதுத் திறைசேரியின் அங்கீகாரம் இன்றி ஆண்டினுள் செலவிடப்பட்டிருந்தது.
(இ)	2015 மே 25 ஆம் திகதிய பீஈடி/2/2015 ஆம் இலக்க அரச தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி	உச்ச வரையறைக்கு உட்பட்டு தொடர்பாடல் கட்டணத்தை மீள்நிரப்புச் செய்துகொள்ள முடியுமாயினும் நிறுவகத்தினால் பட்டியல்களை மீள்நிரப்புச் செய்வதற்குப் பதிலாக அங்கீகரிக்கப்பட்ட உச்ச கொடுப்பனவு சம்பளத்துடன் சேர்த்து செலுத்தப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 346,800 ஆன தொகை மீளாய்வு ஆண்டில் மீள்நிரப்புச் செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன், மீளாய்வு ஆண்டிலும டிசம்பர் மாதம் வரை மேற்படி முறையியல் பின்பற்றப்பட்டு வந்துள்ளது.
(ஈ)	2018 சனவரி 24 ஆம் திகதிய 05/2018(1) ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் திருத்திய 2008 பெப்ருவதி 06 ஆம் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை	பிரசைகள் / சேவை பெறுநர் பிரகடனம் தயார் செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய நிறுவகத்தின் தத்துவம், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு ஒவ்வாமை ஏற்படாதவாறு நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை.

(அ) 2009 இன் 12 ஆம் இலக்க நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவக சட்டத்தின் 5(இ) பிரிவுக்கு அமைய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பல்கலைக் கழகங்கள் மற்றும் நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணிவருவதுடன், நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடைத் துறையில் பட்டம், பட்டப் பின் படிப்புகளை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாயினும், இந்திய தனியார் பல்கலைக் கழகமொன்றுடன் மாத்திரம் மேற்படி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2009 இன் 12 ஆம் இலக்க நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவக சட்டத்தின் 4(ஐ) பிரிவுக்கு அமைய உற்த்தி, ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் வேறு தொழில்நுட்ப தகவல்களை உள்ளடக்கிய நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடைக் கைத்தொழில் பற்றிய தரவு முறைமையொன்றை பேணிவர வேண்டுமாயினும், அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாட்டுக்கு அமைய பின்வரும் அவதானிப்புக்கள் தவிர நிறுவகத்தின் வளங்களை சிக்கனமாகவும், வினைத்திறன்மிக்கவாறும் மற்றும் விளைதிறன்மிக்கவாறும் காலப்பகுதிக்குள் உரிய சட்டங்கள், விதிகளுக்கு இசைவாக பெறுகைகளை மேற்கொண்டு பயன்படுத்தியிருக்கவில்லை என்பது.

அமைச்சிடம் கிடைத்த ஏற்பாடுகளின் கீழ் அமுல்படுத்தப்பட்டுள்ள "சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கருத்திட்டத்தின்" மூலம் ஆடைகளின் தரத்தை பரிசோதிப்பதற்கு ரூ. 2,237,112 பெறுமதிமிக்க இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மேற்படி இயந்திரத்தைப் பயன்படுத்தி மூலப்பொருட்களின் தரம் பற்றிய சான்றிதழைப் பெற்றுக் கொடுக்கத் தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகள் மீளாய்வு ஆண்டில் அங்கீகரித்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

2.3 வேறு கணக்காய்வு அவதானிப்புக்கள்

(அ) 2009 இன் 12 ஆம் இலக்க நெசவுக் கைத்தொழில் மற்றும் ஆடை நிறுவக சட்டத்திற்கு அமைய நிறுவனத்தை தாபிக்கும் குறிக்கோள்கள் 10 குறிப்பிடப்பட்டுள்ளதுடன், மேற்படி குறிக்கோள்களை நிறைவேற்றக்கூடியவாறு நிறுவனத்தின் செயற்றிட்டத்தை தயார் செய்ய வேண்டுமாயினும், அதில் பாடநெறிகளை நடாத்துவது மாத்திரம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ஆ) மேற்படி சட்டத்தின் 12 ஆம் பிரிவுக்கு அமைய, பதவியணியின் நிபுணத்துவம் மற்றும் அறிவை வளர்க்கும் பணிக்கு நிறுவகத்தினால் பதவியணி அபிவிருத்தி நிதியத்தை தாபித்துக் கொள்ள முடியும் என்பதுடன், குறித்த ஆண்டில் நிறுவகத்திற்கு கிடைத்த வருமானத்தில், குறித்துரைக்கப்படுகின்ற விகிதத்தை வருடாந்தம் மேற்படி நிதியத்திற்கு செலவு வைக்க முடியும் எனினும், 2020 ஆம் ஆண்டு தொடர்பில் கடன்பட்டோர் பெறுகையின் மீது 0.5 சதவீதம் பதவிநிலை அங்கீகாரம் இன்றி நிதியத்திற்கு செலவுவைக்கப்பட்டிருந்தது.

(இ) 2015 ஆம் ஆண்டில் அமைச்சரவை அங்கீகாரத்துக்கு அமைய 04 மாடிகளைக் கொண்ட புதிய கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு விலை மனுக் கோருவதற்கு முன்னர் மேற்கொள்ள வெண்டிய பல்வேறு நடவடிக்கைகளுக்கு ரூ. 3,762,000.00 ஆன செலவினம் செய்யப்பட்டிருந்தது. எனினும் ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்வதிலுள்ள அசௌகரியங்கள் காரணமாக மேற்படி நிர்மாணிப்பை நிறுத்த தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக தாங்கிக் கொள்ளப்பட்ட மொத்த செலவினமும் பயனற்றதாகியுள்ளது.

(ஈ) 2020 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு கிடைக்க வேண்டிய நிலுவையில் 05 வருடங்களுக்கும் மேற்பட்ட காலம் இருந்துவருகின்ற கடன்பட்டோர் 42 பேரின் ரூபா 948,156 உம், 3 முதல் 5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலத்தைக் கொண்ட கடன்பட்டோர் 35 பேரின் ரூபா 3,757,350 உம் உள்ளதுடன், மேற்படி நிலுவைகளை அறவிட்டுக் கொள்வதற்கு போதியளவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வு ஆண்டின் கூட்டுத்தொகை ரூ. 4,306,291 ஆன ஆடை மாதிரிகளை பரிசோதிக்கும் சேவைகள் கைத்தொழில் மற்றும் வாணிப அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும், 2021 நவம்பர் மாதம் வரை மேற்படி தொகைகள் அறவிட்டுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2015 ஆம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட 05 மோட்டார் வாகனங்களை விற்பனை செய்து பெற்றுக் கொண்ட ரூ. 3,871,448 ஆன தொகை 2018 மார்ச் மாதம் 01 ஆம் திகதிய சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு அமைய திறைசேரிக்கு அனுப்பப்படல் வேண்டுமாயினும், மேற்படி மீதி நானாவித கடன்கொடுத்தோரின் கீழ் மீளாய்வு ஆண்டில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

ஒப்பம் / டபிள்யு. பீ.சி. விக்ரமரத்ன

கணக்காய்வாளர் தலைமை அதிபதி.